**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M., P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ம் நாள் செவ்வாய்க்கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் 19-ம் நாள்)

**CNR.No.TNED040168862024**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.728/2024**

அரசுக்காக,
காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
கருங்கல்பாளையம் காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண்.113/2023 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

பூபதி (வயது 49/2026),
த/பெ. ராமு,
660, KNK ரோடு பின்புறம்,
கருங்கல்பாளையம்,
ஈரோடு. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 14.03.2023 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 14.03.2023 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 14.03.2023 | 24.03.2023 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 18.11.2024 | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 03.02.2025 | |
| 6. | BNSS பிரிவு 355-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | 1) C.M.P.No.3878/2023-ல் கு.வி.மு.ச பிரிவு 437-ன் கீழான மனு கடந்த 23.03.2023-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. | |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:40:43 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2) அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட M.P.No.1/2026–ல் மனு கடந்த 25.06.2026–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. | | |
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 15.04.2026 | இல்லை |
| | | அ.சா.2 | 25.06.2026 | 25.06.2026 |
| 8. | எதிரியிடம் குற்றம் குறித்து BNSS பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவிய நாள் | 08.07.2026 | | |
| 9. | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | -- | -- | |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 08.07.2026 | | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 04.08.2026 | | |

இவ்வழக்கானது கடந்த 18.11.2024–ம் தேதி, C.C.No.728/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.ஜெகதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**–தீர்ப்புரை–**

இந்த வழக்கு BNSS 193(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 14.03.2023–ம் தேதி, பகல் 11.30 மணியளவில், ஈரோடு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:40:48 +0530

கருங்கல்பாளையம் ராஜாஜிபுரம் சுப்பையா வீதி அருகில் வைத்து எதிரி பூபதி என்பவர் சாட்சி–1 கோபாலகிருஷ்ணன் என்பவரிடம் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளை வெள்ளை தாளில் எழுதி விற்பனை செய்து வருவதாகவும், நிறைய பரிசுகள் விழும் என்று கூறி வெள்ளை துண்டு சீட்டில் 1)KL134, 2) KL641, 3) KL241, 4) KL345, 5) KL835, 6) KL745, 7) KL756, 8) KL787 என பேனாவால் எழுதப்பட்ட 8 துண்டு லாட்டரி சீட்டுகளை சாட்சி–1 கோபாலகிருஷ்ணன் என்பவரிடம் விற்பனை செய்ய முயன்றுள்ள குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 420 இதச மற்றும் 5 r/w 7(3) TNLR Act–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக கருங்கல்பாளையம் காவல் நிலைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 420 இதச மற்றும் 5 r/w 7(3) TNLR Act–ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து BNSS 210 (1) (b)–ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்க்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS–ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு BNSS பிரிவு 274–ன் படி எதிரி மீது 5 r/w 7(3) TNLR Act–ன் கீழான குற்றங்களுக்கான முகாந்திரம் மட்டும் இருந்த காரணத்தினால், அதுகுறித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தினை மறுத்த காரணத்தினால் BNSS பிரிவு 277–ன் படி அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:40:53 +0530

5. அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 8 சாட்சிகளில், 2 சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.8 வரையிலான சான்றுபொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

6. கடந்த 14.03.2023–ம் தேதி, 12.30 மணியளவில், அ.சா.1 திரு.கோபாலகிருஷ்ணன் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அ.சா.ஆ.2 எழுத்து மூலமான புகாரை சாட்சி–7 தலைமைக் காவலர் திரு.சரவணன் பெற்று நிலைய குற்ற எண்.113/2023, சட்டபிரிவு 420 இதச மற்றும் 5 r/w 7(3) TNLR Act–ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலையும், அசல் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

(ii) பின்னர் சாட்சி–8 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்லமுத்து வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் சாட்சி–3 திரு.கணேஷ்குமார், சாட்சி–4 திரு.மோகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தும், சாட்சிகள் அ.சா.1 திரு.கோபாலகிருஷ்ணன், சாட்சி–2 திரு.தேவேந்திரன், சாட்சி–3 திரு.கணேஷ்குமார், சாட்சி–4 திரு.மோகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடியபோது, பவானி மெயின் ரோடு, நெரிக்கல் மேடு பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை தகவலாளி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க தனது பெயர் பூபதி என்று கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவரை சாட்சிகள் சாட்சி–5 திரு.வெங்கடேசன், சாட்சி–6 திரு.அருண்குமார் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அதே



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:40:58 +0530

இடத்தில் எதிரி பூபதி எடுத்து ஆஜர் செய்த தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெள்ளை துண்டு சீட்டில் கையால் எழுதப்பட்ட அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.8 வரையிலான கேரள லாட்டரி சீட்டுகள் 1) KL134, 2) KL 641, 3) KL 241, 4) KL 345, 5) KL 835, 6) KL 745, 7) KL 756, 8) KL 787 மொத்தம் 8 சீட்டுகளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி, சாட்சி கையொப்பம் பெற்றும், பின் எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.7 படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டபிரிவுகள் 420 இதச மற்றும் 5 r/w 7(3) LR Act–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதியை விளக்கி BNSS 351 (1) (பி)–ன் கீழ் வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்துள்ளார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

<u>**இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:–**</u>

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு 5 r/w 7(3) TNLR Act–ன் கீழான குற்றங்கள் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

<u>**தீர்வு:–**</u>

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார் என்றும், எனவே அரசுதரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:41:03 +0530

எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. அரசுதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் அ.சா.1 பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளபோதும், இந்த வழக்கில் புலன்விசாரணை குறித்து அ.சா.2 அரசுதரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதால் எதிரி மீதான குற்றங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

11. அ.சா.1 இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் என்பதும், அ.சா.2 தற்போதைய கருங்கல்பாளையம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் என்பதும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவருகிறது.

12. அ.சா.1 திரு.கோபாலகிருஷ்ணன் தனக்கு பூபதி என்பவரை பல ஆண்டுகளாக தெரியும் என்றும், அவர் அ.சா.1–யிடம் தான் வெளி மாநில லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்து வருவதாகவும் அதை வாங்கினால் பரிசு நிறைய விழும் என சொல்வார் என்றும், அ.சா.1–ம் அவரிடம் பணம் கொடுத்ததாகவும், அவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு வெளிமாநில லாட்டரி சீட்டுகளின் எண்களை வெள்ளை துண்டு சீட்டில் எழுதி கொடுப்பார் என்றும், அதைப் பெற்றுக்கொண்டு அடுத்த நாள் அவரிடம் போய் ஏற்கனவே கொடுத்த வெளிமாநில லாட்டரி சீட்டு எண் கொண்ட வெள்ளை துண்டுச் சீட்டை கொடுத்து பரிசு விழுந்ததா என கேட்டால், அவர் அவரிடம் உள்ள நோட்டைப் பார்த்து விட்டு பரிசு விழவில்லை என சொல்வார் என்றும், அவரிடம் லாட்டரி சீட்டுகளை வாங்கியதில் இதுவரை பரிசு விழுந்தது இல்லை என்றும், 14.03.2023–ம் தேதி மதியம் 11.30 மணியளவில் அ.சா.1–ம் அ.சா.1–க்கு தெரிந்த சாட்சி–2 திரு.தேவேந்திரன் என்பவரும் ஈரோடு கருங்கல்பாளையம் ராஜாஜிபுரம் சுப்பையா வீதி அருகே தங்களது சொந்த வேலையாக சென்று கொண்டு இருந்த போது மேற்படி பூபதி அ.சா.1–யைப் பார்த்து வெளிமாநில லாட்டரி சீட்டு இருக்குது வாங்கிக்கொள் என்று சொன்னதற்கு, தான் இதுவரை உங்களிடம் லாட்டரி சீட்டு வாங்கியதில் பரிசு விழுந்ததே இல்லை எனக் கூறி இனிமேல் நீ யாரிடமும் வெளிமாநில லாட்டரி சீட்டு விற்க கூடாது என அவரைப் பார்த்து சத்தம் போட்டதாகவும், அவர் அங்கிருந்து ஓடி



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:41:08 +0530

விட்டார் என்றும், அவரை அப்படியே விட்டால் அ.சா.1—யைப் போல் பலரையும் ஏமாற்றுவார் என நினைத்து போலீஸ்ல் புகார் கொடுத்தால்தான் அவரது ஏமாற்றும் செயலுக்கு முடிவு வரும் என எண்ணி கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி அ.சா.ஆ.2—ன் படி அ.சா.1 திரு.கோபாலகிருஷ்ணன் புகார் அளித்ததன் அடிப்படையில் எதிரி மீது அ.சா.ஆ.3—ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

13. ஆனால் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திரு.கோபாலகிருஷ்ணன் தன்னுடைய முதல் விசாரணையில் எதிரியை தனக்கு தெரியாது என்றும், தான் காவல்நிலையத்திற்கு ஒரு வேலையாக சென்றபோது போலீசார் தன்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றும், வேறு எந்த விவரமும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று கூறி அ.சா.ஆ.1 புகாரிலுள்ள கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டு அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கில் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையிலும், அரசுதரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாத நிலையிலும், தற்போது எஞ்சி இருப்பது இந்த வழக்கின் புலன் ஆய்வு அலுவலருக்கு பதிலாக சாட்சியம் அளித்த தற்போதைய கருங்கல்பாளையம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளரான அ.சா.2—ன் சாட்சியம் மட்டுமே ஆகும். அ.சா.2 மூலமாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.8 வரையிலான சான்றுபொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியிடமிருந்து அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.8 வரையிலான



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:41:13 +0530

லாட்டரி சீட்டுகள் கைப்பற்றப்பட்டதை தகுந்த சாட்சிகள் மூலம் அரசுதரப்பு நிரூபணம் செய்யவில்லை. அ.சா.1 திரு.கோபாலகிருஷ்ணன் அளித்த அ.சா.ஆ.2 புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.2–ன் சாட்சியம் அமைந்துள்ளதேயன்றி எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யக்கூடிய வகையில் அவரது சாட்சியம் அமைந்திருக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.2–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. இறுதியாக, மேலே ஆராய்ந்த வகையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 5 r/w 7(3) TNLR Act–ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 278(1)–ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

16. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எதிரி பிணையில் இருந்ததால் எதிரியும், பிணையதாரர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்யப்படுகின்றது.

17. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பி.ஆர்.எண்.160/2023–ல் உள்ள அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.8 வரையிலான 1) KL–134, 2) KL–641, 3)KL–241, 4)KL–345, 5)KL–835, 6)KL–745, 7)KL–756, 8)KL–787 மொத்தம் 8 வெள்ளை துண்டு சீட்டில் எழுதிய லாட்டரி சீட்டுகள் வழக்கு ஆவணங்களுடன்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:41:19 +0530

இணைக்கப்பட்டுள்ளதால், அவற்றை வழக்குகோப்புடன் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.08.04 18:41:24 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண். | அரசுதரப்பு சாட்சி எண். | பெயர் | விவரிப்பு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.கோபாலகிருஷ்ணன் | நிகழ்நிலை புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.சுரேஷ் | விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றாவணம் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட ஆவணம் | யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது /சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 15.04.2026 | புகாரிலுள்ள அ.சா.1–ன் கையெழுத்து | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 25.06.2026 | புகார் | அ.சா.2 |
| 3. | அ.சா.ஆ.3 | 25.06.2026 | முதல்தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 4. | அ.சா.ஆ.4 | 25.06.2026 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| 5. | அ.சா.ஆ.5 | 25.06.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| 6. | அ.சா.ஆ.6 | 25.06.2026 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.2 |
| 7. | அ.சா.ஆ.7 | 25.06.2026 | படிவம் 91 | அ.சா.2 |

**எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.**

**அரசு தரப்புச் சான்று பொருள் : எட்டு (பி.ஆர்.எண். 160/2023)**

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றுபொருள் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட சான்றுபொருள் | யாரால் சான்றுபொருள் நிரூபிக்கப்பட்டது/சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.பொ.1 | 25.06.2026 | 1) KL–134 | அ.சா.2 |
| 2. | அ.சா.பொ.2 | 25.06.2026 | 2) KL–641 | அ.சா.2 |
| 3. | அ.சா.பொ.3 | 25.06.2026 | 3)KL–241 | அ.சா.2 |
| 4. | அ.சா.பொ.4 | 25.06.2026 | 4)KL–345 | அ.சா.2 |
| 5. | அ.சா.பொ.5 | 25.06.2026 | 5)KL–835 | அ.சா.2 |
| 6. | அ.சா.பொ.6 | 25.06.2026 | 6)KL–745 | அ.சா.2 |
| 7. | அ.சா.பொ.7 | 25.06.2026 | 7)KL–756 | அ.சா.2 |
| 8. | அ.சா.பொ.8 | 25.06.2026 | 8)KL–787 | அ.சா.2 |

**குறிப்பு :**

1. எதிரி பிணையில் உள்ளார்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.04 18:41:29 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு